From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 19 /2021

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : Murugesan | Father/Husband Name | : Ponnusamy |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 19.06.2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2024.

**எதிரி ஆஜர் இல்லை. வழக்கறிஞர் ஆஜர் குவிமுச பிரிவு 317ன்கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கபட்டுள்ளது.**

**(சாட்சி சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.)**

**முதல் விசாரணை(அரசுதரப்பில்)**

எனது சொந்த ஊர் திருச்சி மாவட்டம் மருங்காபுரி, கொட்டாம்பட்டியில் உறை கடை வைத்துள்ளேன். இவ்வழக்கில் இறந்து போன அழகேசன் என் கடையில் வேலை பார்த்தவர். 29.08.2020ம் தேதி மதியம் 12.30 மணிக்கு கொட்டாம்பட்டியிலிருந்து மேலூருக்கு பணம் வசூல் செய்வதற்காக அழகேசனை அனுப்பி வைத்தேன். அவர் அவரது இரு சக்கர வாகனத்தில் சென்றார். அவருக்கு பின்னால் சுமார் 20 மீ தூரத்தில் நான் என்னுடைய இருசக்கர வாகனத்தில் போய்கொண்டிருந்தேன். அப்போது மேலூரிலிருந்து ஒரு மணல் டிப்பர் லாரி சிங்கம்புணரி பிரிவு பாண்டாங்குடி விளக்கு பக்கம் வரும்போது லாரி அதிவேகமாக வந்து தவறான பாதையில் திரும்பி அழகேசன் மீது மோதி அழகேசனுக்கு தலையில் அடிபட்டு இருந்தார் நான் பக்கத்தில் போய் பார்த்தபோது இறந்திருந்தார். லாரியின் பதிவு எண் TN 21 AJ 0688 ஆகும். லாரி டிரைவர் கொஞ்சம் தள்ளி லாரியை ஓரமாக நிறுத்திவிட்டு ஓடிவிட்டார். அழகேசன் அப்பாவிற்கு தகவல் சொல்லி அவர்கள் பெற்றோர் இருவரும் சுமார் அரைமணிரேத்தில் வந்துவிட்டார்கள். 108 ஆம்புலன்ஸ்ற்கு போன் செய்தேன். அந்த நேரம் ஆம்புலன்ஸ் இல்லாததால் தனியார் ஆம்புலன்ஸ்ல் கொண்டு சென்று மேலூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். புகார் கொடுத்தேன். புகார் அசாஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை:**

நீங்கள் அழகேசன் வாகனத்திற்கு பின்னால் எதற்காக போனீர்கள் என்றால் இன்னொரு டீலருக்கு ஸ்டாக் கொண்டு போய் கொடுப்பதற்காக போனேன். மேற்படி போன விவரத்தை போலீசார் விசாரணையில் சொன்னீர்களா என்றால் ஆம். அவர் வண்டிக்கு 20 மீட்டர் பின்னால் போனதாக போலீஸ் விசாரணையில் சொன்னீர்களா என்றால் ஆம். நீங்கள் அவ்வாறு சொல்லவில்லை என்றும், இவ்வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. லாரி தவறான திசையில் வந்ததாக உங்கள் புகாரிலோ, போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளீர்களா என்றால் ஆம். டிப்பர் லாரியின் எந்த பகுதி மோதியது என்றால் ஓட்டுனர் அமர்ந்திருக்கும் பகுதி. எதிரி கவனமாகவும், மொதுவாகவும்தான் லாரியை ஓட்டி வளைவில் திரும்பும்போது இவ்வழக்கில் இறந்தவர்தான் வேகமாகவும், கவனக்குறைவாகவும் லாரியின் பின்பகுதியில் மோதி விபத்தை வரவழைத்துகொண்டார் என்றால் சரியல்ல. விபத்து குறித்து உங்களுக்கு தெரியாது எனறும் இறந்தவர் உங்கள் கடையில் வேலை செய்ததால் அவருக்கு எதாவது இழப்பீடு கிடைக்கும் என்பதற்காக உங்களை வைத்து புகார் பெறப்பட்டு உங்களை பொய்யாக நேரடி சம்பவ சாட்சியாக சேர்த்து நீங்களும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் ஏ்ன்றால் சரியல்ல. நீங்கள் மட்டும்தான் சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரத்தில் இருசக்கரவாகனத்தில் சொன்னீர்கள் என்றால் ஆம். 108 ஆம்புலன்ஸ்க்கு போன் பன்னி வராமல் தனியார் ஆம்புலன்ஸ்ல் கொண்டு போனதாக போலீசார் விசாரணையில் சொன்னீர்களா என்றால் ஆம்.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 19 /2021

Deposition of witness for: PW - 2

| | | | |
|---|---|---|---|
| Name | : Arunkumar | Father/Husband Name | : Arjunan |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 19.06.2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2024.

**எதிரி ஆஜர் இல்லை. வழக்கறிஞர் ஆஜர் குவிமுச பிரிவு 317ன்கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கபட்டுள்ளது.**

**(சாட்சி சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.)**

**முதல் விசாரணை(அரசுதரப்பில்)**

நான் தொந்திலிங்கபுரத்தில் வசிக்கிறேன். ஓட்டுனராக வேலை செய்கிறேன். இவ்வழக்கில் இறந்த அழகேசன் என் பெரியப்பா மகன். அசா1 முருசேனை தெரியும். நானும் முருகேசனும் 29.08.2020ம் தேதி கொட்டாம்பட்டியிலிருந்து பாண்டாங்குடிக்கு இரு சக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தோம். எங்களுக்கு சுமார் 20 மீட்டர் தூரத்தில் என் தம்பி அழகேசன் அவருடை TN 59 CX 5508 என்ற இருசக்கர வாகத்தில் போய்கொண்டு இருந்தார். அப்போது மேலூரிலிருந்து சிங்கம்புணரிக்கு வந்து கொண்டிருந்த டிப்பர் லாரி அதிவேகமாக வந்து ஒரு வழிப்பாதையில் தவறாக திரும்பி என் தம்பிமீது மோதி என் தம்பியின் முக்கு மற்றும் மண்டையில் அடிப்பட்டு அங்கேயே இறந்துவிட்டார். அங்கிருந்து மேலூர் அரசு மருத்துவனை சவக்கிடங்கிற்கு கொண்டுவந்தார்கள். நானும் முருகேசனும் சென்று கொட்டாம்பட்டி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை:

நீங்கள் முதல் விசாரணயைில் சொன்ன விவரங்களைதான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளீர்களா என்றால் ஆம். உங்களுக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது என்றும், நீங்கள் சொன்னதுபோல் சம்பவ சமயத்தில் சம்பவ இடத்திலேயே இல்லை என்றும், நீங்கள் இவ்வழக்கில் இறந்தவரின் உறவினர் என்பதால் உங்களை இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்து நீங்களும் அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.